**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 29 June 2017

# தேசிய பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களின் உருவாக்கத்தில் நலம் தரும் மது வகை

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக அறிவியல் பிரிவு மாணவி ஒருவரும் பேராசிரியர் ஒருவரும் இணைந்து நலம் தரும் மது வகை (பியர்) ஒன்றைத் தயாரித்துள்ளனர். நச்சு நுண்ணுயிர்க் கிருமிகளை அழித்து எதிர்ப்பு சக்தியைச் சீராக்கக் கூடிய வகையில் இந்த பியர் தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிவியல் பிரிவின் நான்காம் ஆண்டு மாணவியான குமாரி அல்சின் சான், 22, (படம்) என்பவர்தான் இந்த யோசனையை முதன்முதலில் முன்வைத்தார். குமாரி அல்சின், புரோபயாடிக்ஸ் என்னும் செரிமானத்திற்கு உதவும் ஊட்டச்சத்து பானத்தை அடிக்கடி அருந்துபவர்.



இதுபோன்ற ஊட்டச்சத்து பானம் அனைத்தும் பால் சார்ந்த உணவுப்பொருட்களால் தயாரிக்கப்படுபவை, பால் சார்ந்த பொருட்கள், புரோட்டின் போன்ற உணவுகளுக்கு ஒவ்வாமை உள்ளவர்கள் இதுபோன்ற பானத்தை அருந்த முடியாது. புளித்த உணவுகளில் நல்ல நுண்ணுயிர்க் கிருமிகள் அதிகம் இருக்கும், இருந்தும் இப்போது சந்தையில் செரிமானத்திற்கு உதவும் ஊட்டச்சத்துள்ள பியர் மதுபான வகை இல்லை என்கிறார் குமாரி அல்சின் சான்.

இவர் தயாரிக்கவிருக்கும் பியரில் ஊட்டச்சத்துடன் 3.5 விழுக்காடு போதை தரும் சத்தும் இருக்கும். சத்துள்ள இந்த பீரை உருவாக்குவதில் துணைப் பேராசிரியர் லியூ ஷோ குவான் உதவியுடன் கடந்த 8 மாதங்களாக ஆய்வுப் பணியில் ஈடுபட்டு வருகிறார் குமாரி சான்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.